நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J.உம்முல் பரிதா, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை.

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 16ஆம் நாள்
2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ம் நாள் புதன்கிழமை

C.N.R.No. TNMY02-000204-2023

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 03/2023**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்
மயிலாடுதுறை காவல் நிலையம்
குற்ற எண். 1368/2021 ..... குற்றமுறையிடுபவர்

// எதிர் //

1) சரண்ராஜ், 34/2021
த/பெ. கார்மேகம்,
வடக்கு தெரு,
கொற்றவநல்லூர்,
நீடூர், மயிலாடுதுறை.

2) கார்த்திகேயன், 33/2021
த/பெ. கார்மேகம்,
வடக்கு தெரு,
கொற்றவநல்லூர்,
நீடூர், மயிலாடுதுறை.

3) கருணாகரன், 30/2021
த/பெ. கார்மேகம்,
வடக்கு தெரு,
கொற்றவநல்லூர்,
நீடூர், மயிலாடுதுறை. ...... எதிரிகள்

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட**
**R.O.C. No.814 /2020/ RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்**
**மற்றும் Rule 106 Cr.R.P. ன்படி**

**CASE SUMMARY**

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:23:23 +0530

<table>
<tr><td rowspan="2">i)</td><td rowspan="2">The period of Remand of the Accused</td><td>Date of Remand</td><td>Date of Surrender</td><td colspan="2">Released on Bail</td></tr>
<tr><td>A1, A3 - 12.06.2021</td><td>-</td><td colspan="2">A1, A3 -16.06.2021<br>A2 - 05.07.2021(AB)</td></tr>
<tr><td rowspan="2">ii)</td><td rowspan="2">Date of filing of the Complaint/Final report in the Court</td><td>Filing of complaint</td><td colspan="3">Filing of Final Report</td></tr>
<tr><td>11.06.2021</td><td colspan="3">03.01.2023</td></tr>
<tr><td>iii)</td><td>The date of questioning of the Accused U/s.240 of the code of Criminal Procedure 1973</td><td colspan="4">18.02.2023</td></tr>
<tr><td rowspan="3">iv)</td><td rowspan="3">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except petitions u/s.355 of BNSS.</td><td>Crlmp No.</td><td colspan="2">Date of filing</td><td>Result</td></tr>
<tr><td>-</td><td colspan="2">-</td><td>-</td></tr>
<tr><td>-</td><td colspan="2">-</td><td>-</td></tr>
<tr><td rowspan="10">v)</td><td rowspan="10">Date of examination in-chief and cross-examination of a witness</td><td>Name of the witness</td><td colspan="2">Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW1</td><td colspan="2">01.10.2024</td><td>01.10.2024</td></tr>
<tr><td>PW2</td><td colspan="2">01.10.2024</td><td>01.10.2024</td></tr>
<tr><td>PW3</td><td colspan="2">21.03.2025</td><td>21.03.2025</td></tr>
<tr><td>PW4</td><td colspan="2">20.05.2025</td><td>20.05.2025</td></tr>
<tr><td>PW5</td><td colspan="2">20.05.2025</td><td>20.05.2025</td></tr>
<tr><td>PW6</td><td colspan="2">18.07.2025</td><td>18.07.2025</td></tr>
<tr><td>PW7</td><td colspan="2">30.09.2025</td><td>30.09.2025</td></tr>
<tr><td>PW8</td><td colspan="2">28.10.2025</td><td>28.10.2025</td></tr>
<tr><td>PW9</td><td colspan="2">24.03.2026</td><td>24.03.2026</td></tr>
<tr><td>vi)</td><td>Date of examination of the AccusedU/s.313(1)(b) Cr.P.C.</td><td colspan="4">26.03.2026</td></tr>
<tr><td>vii)</td><td>Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be; and</td><td colspan="4">Nil</td></tr>
<tr><td>viii)</td><td>Grant of stay by superior court and the results there of</td><td colspan="4">Nil</td></tr>
</table>

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:23:58 +0530

இவ்வழக்கு 05.01.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 27.03.2026 ஆம் தேதி இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 திருமதி. B. செந்தில்வடிவு அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சந்தோஷ்குமார் அவர்கள் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

**// தீர்ப்புரை //**

(i) **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :-**

1, 2, 3 எதிரிகள் மூவரும் கள்ளச்சாராயம் விற்பனை செய்ததை சாட்சி-1ன் குடும்பத்தினர் சொல்லி தான் எதிரிகள் பாதிக்கப்பட்டதாக நினைத்து எதிரிகள் மூவரும் 11.06.2021ம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் சாட்சி-1 மற்றும் சாட்சி-4 ஆகியோர்களிடம் அவர்களது வீட்டு வாசலுக்கு முன்பு சென்று சாட்சி-1ஐயும், சாட்சி-1ன் சகோதரரான சாட்சி-4ஐயும் குச்சிக்காரி மகன்களா, தேவடியா மகன்களா வெளியே வாங்கடா நாங்கள் சாராயம் விற்கிறதை போலிஸ்கிட்ட நீங்க தானடா சொன்னீங்க என்று திட்டியுள்ளனர். அதன் பிறகு இது சம்மந்தமாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுப்பதற்காக சாட்சி-1, சாட்சி-2 உடன் புறப்பட்டு அன்று மாலை 17.30 மணியளவில் ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் வரும்போது எதிரிகள் மூன்று பேரும் சாட்சி-1 மற்றும் சாட்சி-2ஐ வழிமறித்து குச்சிக்காரி மகன்களா, தேவடியா மகன்களா எங்க மேலேயே புகார் கொடுக்க போறீங்களா என்று திட்டியும், 1வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் சாட்சி-1ன் தலையில் கொத்தியும், அதை தடுக்க வந்த சாட்சி-2ஐ 1வது எதிரி அருவாளால் இடது பக்க மார்பில் கீறியும், எதிரிகள் மூன்று பேரும் சாட்சி-1 மற்றும் சாட்சி-2ஐ காலால் மாறி மாறி உதைத்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1வது எதிரி அருவாளை சாட்சி-1 மற்றும் சாட்சி-2னிடம் காட்டி இனிமேல் எங்ககிட்ட வச்சிக்கிட்டா உங்க எல்லோரையும் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324 (2 எண்ணிக்கை), 323, 506(ii) இதசவின் கீழும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323 இதசவின் கீழும் நடவடிக்கை எடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு வழக்கிற்கு அடிப்படையான ஆதாரங்கள் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 கு.வி.முச படி இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.04.08 20:24:19 +0530

3) பின்னர் 1வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324 (2 எண்ணிக்கை), 323, 506(ii) இதசவின் கீழும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323 இதசவின் கீழும் குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு தமிழில் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரிகள் அவற்றை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து வழக்காட விரும்புவதாகவும் கூறினார். பின்னர் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**(ii) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

5) 1, 2, 3 எதிரிகள் மூவரும் கள்ளச்சாராயம் விற்பனை செய்ததை அ.சா.1ன் குடும்பத்தினர் சொல்லி தான் எதிரிகள் பாதிக்கப்பட்டதாக நினைத்து எதிரிகள் மூவரும் 11.06.2021ம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களிடம் அவர்களது வீட்டு வாசலுக்கு முன்பு சென்று அ.சா.1ஐயும், அ.சா.1ன் சகோதரரான அ.சா.2ஐயும் குச்சிக்காரி மகன்களா, தேவடியா மகன்களா வெளியே வாங்கடா நாங்கள் சாராயம் விற்கிறதை போலிஸ்கிட்ட நீங்க தானடா சொன்னீங்க என்று திட்டியுள்ளனர். அதன் பிறகு இது சம்மந்தமாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுப்பதற்காக அ.சா.1, அ.சா.6 உடன் புறப்பட்டு அன்று மாலை 17.30 மணியளவில் ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் வரும்போது எதிரிகள் மூன்று பேரும் அ.சா.1 மற்றும் அ.சா.6ஐ வழிமறித்து குச்சிக்காரி மகன்களா, தேவடியா மகன்களா எங்க மேலேயே புகார் கொடுக்க போறீங்களா என்று திட்டியும், 1வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் அ.சா.1ன் தலையில் கொத்தியும், அதை தடுக்க வந்த அ.சா.6ஐ 1வது எதிரி அருவாளால் இடது பக்க மார்பில் கீறியும், எதிரிகள் மூன்று பேரும் அ.சா.1 மற்றும் அ.சா.6ஐ காலால் மாறி மாறி உதைத்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1வது எதிரி அருவாளை அ.சா.1 மற்றும் அ.சா.6னிடம் காட்டி இனிமேல் எங்ககிட்ட வச்சிக்கிட்டா உங்க எல்லோரையும் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) கடந்த 11.06.2021ம் தேதியன்று **அ.சா.8** திரு. செல்வகுமார் மயிலாடுதுறை காவல் நிலைய பணியில் இருந்தபோது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கொற்றவைநல்லூர், வடக்கு தெரு செல்வம் மகன் ஆனந்த் என்பவரிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று, காவல் நிலைய குற்ற எண். 1368/2021 ச/பி. 341, 294(b), 324, 323, 506(ii) இதசவின் கீழ் முதல் தகவல்

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:24:33 +0530

அறிக்கை **அ.சா.ஆ.4** பதிவு செய்து, பின்னர் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளார்.

7) பின்னர், **அ.சா.9** திரு. பார்த்திபன் உதவி ஆய்வாளர் இவ்வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.06.2021ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடமான ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகே சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் மோகன், ராஜமாணிக்கம் இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் **அ.சா.ஆ.5** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** தயார் செய்து, பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளை மறுநாள் 12.06.2021ம் தேதி காலை 08.30 மணிக்கு நீடூர் பேருந்து நிலையம் அருகில் 1வது எதிரி சரண்ராஜ், 3வது எதிரி கருணாகரன் ஆகியோர்களை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றம் வசம் ஒப்படைத்து, 2வது எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி முன் பிணை பெற்று சென்று விட்டபடியால் அவரை கைது செய்யவில்லை, பின்னர் அ.சா.1 மற்றும் அ.சா.6க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பாரதிதாசன் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் **அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8** மற்றும் வாக்குமூலம் பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் செல்வகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 26.07.2021ம் தேதியன்று சட்டப்பிரிவுகள் 294(b), 341, 324, 323, 506(ii) இதசவின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) புகார்தாரரான அ.சா.1 திரு. ஆனந்த் சம்பவம் பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 திரு. அருண்ராஜ், அ.சா.3 திரு. ராஜ்குமார் ஆகியோர் சம்பவம் பற்றி சாட்சியமளித்துள்ளார்கள். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4 திரு. மோகன், அ.சா.5 திரு. ராஜமாணிக்கம் ஆகியோர் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.6 திரு. தியானேஸ்வரன் சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றியும் சாட்சியமளித்துள்ளார். மருத்துவ சாட்சியான அ.சா.7 திரு. பாரதிதாசன் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கியது பற்றி சாட்சியமளித்துள்ளார். முதல் விசாரணை அதிகாரியான அ.சா.8 திரு. செல்வகுமார் தலைமை காவலர் புகாரை பெற்று, வழக்கு பதிவு செய்து மேல்விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளதை பற்றி சாட்சியமளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 திரு. பார்த்திபன் உதவி ஆய்வாளர் இவ்வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்து, எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார்.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:24:41 +0530

9) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் 24.03.2026 அன்று முடிக்கப்பட்டது. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 9 சாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

10) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியத்தில், எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சிய விவரங்களை தொகுத்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம், பொய் வழக்கு என்றும், தனது தரப்பு சாட்சியம் இல்லை என்று கூறி எதிரிகள் தரப்பு சாட்சியம் 26.03.2026 அன்று முடிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

11) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கானது நிரூபிக்கப்பட்டு, புலன் விசாரணை அதிகாரியின் விசாரணையானது வழக்கு சங்கதியுடன் கோர்வையாக இருப்பதாலும் புலன் விசாரணை முறையாக செய்து ஆவணங்கள் மூலமாக எதிரிகள் செய்த குற்றத்தை அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு அரசு தரப்பால் வாதிடப்பட்டது.

12) மாறாக எதிரிகள் தரப்பானது இவ்வழக்கின் புகார்தாரர் சம்பவத்தை பற்றி முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார் என்றும், எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகளை வழக்கு சம்பவத்துடன் தொடர்புபடுத்தி அரசு தரப்பு எதிரிகளின் மீதுள்ள குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி இவ்வழக்கிலிருந்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிடப்பட்டது.

**<u>ii) தீர்வுக்குரிய பிரச்சினை</u>** :–

13) இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324, 323, 506(ii) இதசவின் கீழ் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>iv தீர்வு</u>** :

14) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் சம்பவம் 11.06.2021ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் அமைந்துள்ளது. பின்னர் அ.சா.1னிடம் புகார் வாக்குமூலம் பெற்று, 11.06.2021ந் தேதி இரவு 20.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 12.06.2021ம் தேதி காலை 11.30 மணிக்கு நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது. இவ்வழக்கில் காலதாமதம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் எவ்வித விளக்கமும் முன்வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:24:55 +0530

15) இவ்வழக்கில் 1, 2, 3 எதிரிகள் மூவரும் கள்ளச்சாராயம் விற்பனை செய்ததை சாட்சி–1ன் குடும்பத்தினர் சொல்லி தான் எதிரிகள் பாதிக்கப்பட்டதாக நினைத்து எதிரிகள் மூவரும் 11.06.2021ம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் சாட்சி–1 மற்றும் சாட்சி–4 ஆகியோர்களிடம் அவர்களது வீட்டு வாசலுக்கு முன்பு சென்று சாட்சி–1ஐயும், சாட்சி–1ன் சகோதரரான சாட்சி–4ஐயும் குச்சிக்காரி மகன்களா, தேவடியா மகன்களா வெளியே வாங்கடா நாங்கள் சாராயம் விற்கிறதை போலிஸ்கிட்ட நீங்க தானடா சொன்னீங்க என்று திட்டியுள்ளனர். அதன் பிறகு இது சம்மந்தமாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுப்பதற்காக சாட்சி–1, சாட்சி–2 உடன் புறப்பட்டு அன்று மாலை 17.30 மணியளவில் ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் வரும்போது எதிரிகள் மூன்று பேரும் சாட்சி–1 மற்றும் சாட்சி–2ஐ வழிமறித்து குச்சிக்காரி மகன்களா, தேவடியா மகன்களா எங்க மேலேயே புகார் கொடுக்க போறீங்களா என்று திட்டியும், 1வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் சாட்சி–1ன் தலையில் கொத்தியும், அதை தடுக்க வந்த சாட்சி–2ஐ 1வது எதிரி அருவாளால் இடது பக்க மார்பில் கீறியும், எதிரிகள் மூன்று பேரும் சாட்சி–1 மற்றும் சாட்சி–2ஐ காலால் மாறி மாறி உதைத்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1வது எதிரி அருவாளை சாட்சி–1 மற்றும் சாட்சி–2னிடம் காட்டி இனிமேல் எங்ககிட்ட வச்சிக்கிட்டா உங்க எல்லோரையும் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324 (2 எண்ணிக்கை), 323, 506(ii) இதசவின் கீழும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323 இதசவின் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

16) மேற்படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில் புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**ல், சரண்ராஜ், கார்த்திகேயன், கருணாகரன் ஆகிய மூன்று பேரும் எங்கள் ஊரில் தொடர்ச்சியாக ஊரடங்கு காலத்தில் சாராயம் விற்று வந்த நிலையில் எங்கள் ஊரை சேர்ந்த பொதுநலம் கருத்தில் கொண்டு யாரோ மேற்படி மூவர் செய்து வரும் சமூக விரோத செயலை காவல் துறைக்கு தெரிவித்திருந்தனர். இதன் காரணமாக காவல் துறையினர் தகுந்த நடவடிக்கை எடுத்தனர் இந்நிலையில் 11.06.2021ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் எனது அண்ணன் மற்றும் என் குடும்பத்தை சார்ந்தவர்கள் தான் போலிசுக்கு தகவல் தெரிவித்ததாக கருதி மேற்படி மூவரும் எங்க வீட்டு வாசலுக்கு வந்து குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே வெளியே வாங்கடா யாருடா எங்களை சாராயம் விற்கிறதுன்னு போலிஸ்கிட்ட சொன்னது என சத்தம் போட்டார்கள். அப்போது ஊராட்சி மன்ற தலைவராக இருக்கும் என் அண்ணன் அருள்ராஜ் என்னை மேற்படி நபர்கள் மீது காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுக்குமாறு அனுப்பினார். நானும் என் சித்தப்பா பையன் தியானேஷ்வரன் என்பவரும் ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகே சுமார் மாலை 05.30

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:25:14 +0530

மணியளவில் வரும்போது அங்கு வந்த சரண்ராஜ், கார்த்திகேயன் மற்றும் கருணாகரன் ஆகிய மூவரும் என்னை வழிமறித்து குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே எங்க மேலேயே புகார் கொடுக்க போறியா என கூறி அதில் இருந்த சரண்ராஜ் அவர் கையில் வைத்திருந்த அருவாளால் என் தலையில் கொத்தினார் இதை தடுக்க வந்த என் சித்தப்பா மகன் தியானேஷ்வரனின் இடது பக்க மார்பில் சரண்ராஜ் அருவாளால் கீறினான். மேலும், மேற்படி மூன்று பேரும் எங்களை காலால் எட்டி உதைத்துவிட்டு சரண்ராஜ் அவன் கையில் வைத்திருந்த அருவாளை எங்களிடம் காட்டி எங்களிடம் வைத்துக்கொண்டால் உங்களை கொலை செய்துவிடுவேன் என மிரட்டினார். நாங்கள் இருவரும் வலி தாங்காமல் சத்தம் போடவே அவர்கள் அங்கிருந்து ஓடி விட்டார்கள் என்று கூறியுள்ளார்.

17) புகார்தாரரான **அ.சா.1** தனது முதல் விசாரணையில், கொரோனா தடைக்காலத்தில் 2021ம் ஆண்டில் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரில் சாராயம் விற்று வந்தனர், அப்போது ஊர் மக்களில் யாரோ மேற்படி எதிரிகள் ஊரில் சாராயம் விற்று வருகிறார்கள் என்ற தகவலை போலிசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர், அதனால் போலிசார் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தனர், தனது அண்ணன் அருள்ராஜ் ஊராட்சி மன்ற தலைவராக எங்கள் ஊரான நீடூரில் உள்ளார், மேற்படி தனது அண்ணன் தான் மேற்படி தகவலை போலிசாருக்கு தெரிவித்து இருப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் ஆஜர் எதிரிகள் மூவரும் 11.06.2021ம் தேதி மாலை 05.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்து வாசலில் நின்று கொண்டு குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்ற ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார், எங்களை சும்மா விடமாட்டேன் என்றும் கொலை மிரட்டல் விடுத்தனர், எங்களுக்கு அவர்கள் திட்டியதும் மிகவும் அவமானமாகவும், பயமாகவும் இருந்ததால் மேற்படி தனது அண்ணன் அருண்ராஜ் மேற்படி பிரச்சனை செய்த எதிரிகள் மீது புகார் அளிக்கும் படி தன்னையும், தனது சித்தப்பா மகன் தியானேஷ்வரனையும் காவல் நிலையம் நீங்கள் செல்லுங்கள் பின்னாடி தானும் வருகிறேன் என்று கூறினார், அதனால் தான் ஒரு இருசக்கர வாகனத்திலும், தியானேஸ்வரன் அவரது இருசக்கர வாகனத்திலும் சென்றோம், நாங்கள் ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் மூவரும் எங்களை வழி மறைத்து, எங்களை குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்ற ஆபாசமான வார்த்தைகளால் திட்டினர், நாங்கள் இருவரும் எங்களது இருசக்கர வாகனத்தை நிறுத்தி வைத்துவிட்டு கீழே இறங்கி ஏன் இவ்வாறு பேசுனீர்கள் என்று கேட்டேன், அதற்கு நீங்கள் காவல் நிலையம் சென்று எங்கள் மீது புகார் கொடுக்க கூடாது என்றும், கொடுத்தால் உங்களை கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு எதிரி சரண்ராஜ் கையில் வைத்திருந்த அருவாளை எடுத்து தனது மண்டையில் கொத்திவிட்டார், அதை தடுக்க வந்த தனது சித்தப்பா மகன் தியானேஷ்வரனுக்கு வலது தோள்பட்டையில் அருவாள் கிழித்து காயம் ஏற்பட்டது, நாங்கள் இருவரும் எங்களை காப்பாற்றுங்கள் என்று கத்தினோம், அருகில்

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:25:22 +0530

இருந்தவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தனர், மேற்படி எதிரிகள் மூவரும் எங்களை கொலை மிரட்டல் விடுத்துவிட்டு சென்றனர், அப்போது தனது மாமா மகன் ராஜ்குமார், தனது அண்ணன் அருண்ராஜ் போன்றவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தனர், எங்கள் இருவரையும் ராஜ்குமாரும், அருண்ராஜும் எங்களை இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சுமார் 05.30 மணிக்கு சென்றனர், சுமார் 05.45 மணியளவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரணை செய்து தன்னிடமிருந்து புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** பெற்றார்கள், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

18) கண்ணுற்ற சாட்சியான **அ.சா.2** தனது சாட்சியத்தில், கொரோனா தடைக்காலத்தில் 2021ம் ஆண்டில் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரில் சாராயம் விற்று வந்தனர், அப்போது ஊர் மக்களில் யாரோ மேற்படி எதிரிகள் ஊரில் சாராயம் விற்று வருகிறார்கள் என்ற தகவலை போலிசாருக்கு தெரிவித்துள்ளனர், அதனால் போலிசார் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தனர், தான் மேற்படி தகவலை போலிசாருக்கு தெரிவித்திருப்பேன் என தவறாக நினைத்துக்கொண்டு 11.06.2021ம் தேதி மாலை சுமார் 04.30 மணியிலிருந்து 05.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் மூவரும் குச்சிக்காரி மவனே, தேவடியா மகனே என்ற ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார், எங்களை அடிக்க வந்தனர், நாங்கள் அவர்களிடம் பிரச்சனை செய்யவில்லை, தான் தனது தம்பி அ.சா.1னையும், தியானேஷ்வரனையும் காவல் நிலையம் நீங்கள் செல்லுங்கள் பின்னாடி தானும் வருகிறேன் என்று கூறினேன், அ.சா.1ம் தியானேஷ்வரனும் இருசக்கர வாகனத்தில் ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் சென்று கொண்டிருந்தபோது எதிரி சரண்ராஜ் என்பவர் அவர்களின் இருசக்கர வானத்தை மறைத்தனர், எதிரி சரண்ராஜ் கையில் வைத்திருந்த அருவாளால் அ.சா.1ன் தலையில் கொத்தினார், அதை தடுத்தபோது தியானேஷ்வரனின் தோள்பட்டையிலும் அருவாள் கிழித்து விட்டது அவருக்கு இரத்தம் வந்தது, அவர்கள் இருவரும் ஒரு இருசக்கர வாகனத்திலும், தான் தன்னுடைய இருசக்கர வாகனத்திலும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம், அங்கு அ.சா.1க்கும், தியானேஷ்வரனுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது, சிகிச்சையில் இருந்தபோது அ.சா.1ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

19) கண்ணுற்ற சாட்சியான **அ.சா.3** தனது சாட்சியத்தில், கடந்த 11.06.2021ம் தேதி மாலை 05.30 மணியளவில் மயிலாடுதுறை வந்து விட்டு தனது வீட்டிற்கு ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் வந்து கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரியும், சரண்ராஜ், கருணாகரனும் சேர்ந்து அ.சா.1 ஆனந்திடம் பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள், சரண்ராஜ் அருவாளால் ஆனந்தின் தலையில் கொத்திவிட்டு,

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:25:29 +0530

கொஞ்ச தூரம் சென்றுவிட்டு கையில் அருவாளை வைத்துக்கொண்டு எங்களிடம் வைத்துக்கொண்டால் உங்களை கொலை செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார், எதிரிகள் மூவரும் அ.சா.1ஆன ஆனந்தை அடித்தார்கள், அங்கு நின்று கொண்டிருந்த தியானேஷ்வரன் மேற்படி சண்டையை தடுத்தபோது அவருடைய நெஞ்சில் சரண்ராஜ் அருவாளால் கீறிவிட்டார், அ.சா.1ஆன ஆனந்தையும், தியானேஷ்வரனையும் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வந்து சேர்த்தேன், மருத்துவமனையில் இருந்தபோது அ.சா.1ஐ விசாரணை செய்து போலிசார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள், ஆனந்த் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தார், தியானேஷ்வரன் அன்றையதினமே முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு வீட்டிற்கு வந்து விட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

20) பார்வை மகசர் சாட்சிகளான **அ.சா.4** மற்றும் **அ.சா.5** தங்களது சாட்சியத்தில், சம்பவம் பற்றி எதுவும் தெரியாது, பார்வை மகசரில் உள்ள கையெழுத்துக்களில் தங்களுடையது எதுவும் இல்லை என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள்.

21) பாதிக்கப்பட்ட சாட்சியான **அ.சா.6** தனது சாட்சியத்தில், கொரோனா காலகட்டத்தில் சாராயம் விற்றதற்காக ஆஜர் எதிரிகளை போலிசார் கைது செய்தார்கள், அவர்கள் சிறையில் இருந்து வெளியில் வந்த பிறகு தனது பெரியப்பா மகன் அ.சா.2 அருண்ராஜ் வீட்டின் முன்பு நின்று கொண்டு அவர் தான் எதிரிகளை பற்றி போலிசில் கூறியதாக தவறாக நினைத்து கொண்டு குச்சிக்காரி தேவுடியா மகனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள், அ.சா.2 ஏன் இவ்வாறு திட்டுகிறீர்கள் என்று கேட்டார், அப்போது அவர்களுக்குள் பிரச்சனை ஆகிவிட்டது, மேற்படி பிரச்சனை தொடர்பான புகாரினை கொடுப்பதற்காக எனது அண்ணன் அ.சா.1 ஆனந்தும், தானும் இருசக்கர வாகனத்தில் அவர் ஓட்ட பின்னால் அமர்ந்து கொண்டு ஆனதாண்டவபுரம் ரயில்வே கேட் அருகில் சென்று கொண்டிருந்தபோது எங்களது வாகனத்தை எதிரி சரண்ராஜ் மறைத்தார், எங்களை பற்றி புகார் கொடுக்க போகிறீர்களா கொடுத்தால் உயிருடன் இருக்க முடியாது என்று எதிரி சரண்ராஜ் கூறினார், எதிரி சரண்ராஜ் கையில் வைத்திருந்த அருவாளால் தனது அண்ணன் தலையில் கொத்தி விட்டார், இதை தடுக்க சென்ற என்னை கீழே தள்ளி விட்டு எனது நெஞ்சில் அருவாளால் கீறி விட்டார், சத்தம்கேட்டு அருகில் இருந்தவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து விட்டனர், தனது மாமா மகன் ராஜ்குமார் அவரது இருசக்கர வாகனத்தில் எங்களை அழைத்து கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார், அங்கு 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன், தனது அண்ணனுக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.04.08 20:25:39 +0530

22) மருத்துவ சாட்சியான **அ.சா.7** தனது சாட்சியத்தில், கடந்த 11.06.2021ம் தேதி மாலை 05.24 மணியளவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது தன்னிடம் 37 வயது மதிக்கத்தக்க ஆனந்த் த/பெ. செல்வம் வடக்கு தெரு, கொற்றவைநல்லூர், மயிலாடுதுறை என்பவரை அவருடைய மாமா ராஜ்குமார் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார், அவர் சுயநினைவுடன் இருந்தார், அவரை விசாரித்தபோது தன்னை தெரிந்த 2 நபர்கள் அன்றையதினமே மாலை 05.30 மணியளவில் கல் மற்றும் அருவாளால் ஆனந்தபுரம் இரயில்வே கேட் அருகில் தன்னை தாக்கியதாக கூறினார், அவரை பரிசோதனை செய்தபோது அவரின் பின்புற தலையில் குத்துக்காயம் 2 x 1 x 1 செ.மீ என்ற அளவில் இருந்தது, அவரை பரிசோதித்து விட்டு அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளித்து வெளிப்புற நோயாளியாக அவரை பரிசோதித்து விட்டு அனுப்பினேன், விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2 தான் வழங்கியது தான், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன், மேற்சொன்ன ஆயுதங்களால் மேற்சொன்னவாறு தாக்கியருந்தால் மேற்கண்டவாறு காயம் ஏற்பட வாய்ப்புண்டு, அன்றையதினமே மாலை 05.30 மணியளவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது தன்னிடம் 25 வயது மதிக்கத்தக்க தியானேஷ்வரன் த/பெ. சந்திரன் என்பவரை அவருடைய மாமா ராஜ்குமார் அவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தார், அவர் சுயநினைவுடன் காணப்பட்டார், அவரை விசாரித்தபோது தன்னை தெரிந்த நபர்கள் 2 பேர் மாலை 05.30 மணியளவில் மேற்படி அதே சம்பவத்தில் கல் மற்றும் அருவாளால் அவர்கள் வீட்டு அருகில் தாக்கியதாக கூறினார், அவரை பரிசோதனை செய்தபோது அவரின் வலது தாடை மற்றும் இடது கையில் வீக்கம் இருந்தது, அவருக்கு தக்க சிகிச்சை அளித்து வெளிப்புற நோயாளியாக அவரை அனுப்பி வைத்தேன், விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.3** தான் வழங்கியது தான், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன், மேற்சொன்ன ஆயுதங்களால் மேற்சொன்னவாறு தாக்கியிருந்தால் மேற்கண்டவாறு காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் சாட்சியமளித்துள்ளார்.

23) மேற்படி சாட்சியங்களின் சாட்சியத்தினை பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1 கொடுத்துள்ள புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் ஊரில் சாராயம் விற்று வந்ததை ஊர் மக்கள் யாரோ போலிசிடம் தெரிவித்து போலிசார் எதிரிகள் மீது நடவடிக்கை எடுத்ததால் அ.சா.1ன் அண்ணனான அ.சா.2 அந்த ஊராட்சி மன்ற தலைவராக இருந்ததால் அவர் தான் போலிசிடம் தெரிவித்திருப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் எதிரிகள் கடந்த 11.06.2021ம் தேதியன்று மாலை 05.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டு வாசலுக்கு வந்து நின்று கொண்டு ஆபாசமான வார்த்தைகளால் திட்டி, கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அதனால் அவர்களுக்கு அவமானமாக இருந்ததால் அ.சா.2 காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் படி அ.சா.1ஐயும், அ.சா.6ஐயும் காவல் நிலையம்

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:25:49 +0530

செல்லும்படி கூறிவிட்டு நான் பின்னாடி வருகிறேன் என்று கூறியதால் அ.சா.1ம், அ.சா.6ம் ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் சென்று கொண்டிருந்தபோது எதிரிகள் மூன்று பேரும் அங்கு வந்து அ.சா.1ஐ வழிமறித்து, கெட்ட வார்த்தைகளால் திட்டி, 1வது எதிரி அ.சா.1ன் தலையில் அவர் கையில் வைத்திருந்த அருவாளால் கொத்தினார் என்றும், அதை தடுத்த அ.சா.6ஐ இடது பக்க மார்பில் 1வது எதிரி அருவாளால் கீறினார் என்றும், எதிரிகள் மூன்று பேரும் அ.சா.1 மற்றும் அ.சா.6ஐ காலால் எட்டி உதைத்து 1வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளை காட்டி எங்களிடம் வைத்துக்கொண்டால் உங்களை கொலை செய்துவிடுவோம் என மிரட்டியதாகவும், அ.சா.1, அ.சா.6 வலி தாங்காமல் சத்தம் போட்டவுடன் அவர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும், அந்த வழியாக வந்த அ.சா.2 மற்றும் அ.சா.3 அவர்களை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது மயிலாடுதுறை போலிசார் வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்றதாகவும் கூறியுள்ளார்.

24) அ.சா.1 தனது சாட்சியத்தில், மேற்படி புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளையே ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார். மேலும், அவர் தனது சாட்சியத்தில் அ.சா.6க்கு வலது தோள்பட்டையில் அருவால் கிழித்த காயம் ஏற்பட்டதாகவும், எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்ற பின்பு தான் அ.சா.2 மற்றும் அ.சா.3 சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும், மாலை 05.45 மணியளவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்து வாக்குமூலம் வாங்கியதாகவும் கூறியுள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், அ.சா.1க்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்துள்ளது என்றும், சிகிச்சையில் இரண்டு நாட்கள் இருந்ததாகவும் கூறியுள்ளார்.

25) அ.சா.6ம் தனது சாட்சியத்தில், இரண்டு நாட்கள் சிகிச்சையில் இருந்ததாக கூறியுள்ளார். மேலும், எதிரிகள் அருவாளால் நெஞ்சில் கீறிவிட்டதாகவும் கூறியுள்ளார். ஆனால் மருத்துவர் சாட்சியான அ.சா.7, அ.சா.1 மற்றும் அ.சா.6ஐ புறநோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாக கூறியுள்ளார். அ.சா.1ன் பின்புற தலையில் 2 x 1 x 1 செ.மீ அளவில் குத்துக்காயம் இருந்தது என்றும், அ.சா.6க்கு வலது தாடை மற்றும் இடது கையில் வீக்கம் இருந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார். இருவரும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றும், சிகிச்சைக்கு வந்த நேரம் மாலை 05.24 என்றும் கூறியுள்ளார். ஆனால், சம்பவம் மாலை 05.30 மணியளவில் நடந்துள்ளதாக அ.சா.1 சாட்சியமளித்துள்ளதாலும், மாலை 05.45 மணியளவில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் தன்னிடம் வந்து வாக்குமூலம் வாங்கியதாகவும் கூறியுள்ளதால் விபத்து பதிவேடு முரண்பட்டு அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், 1வது எதிரி அருவாளால் அ.சா.1ஐ தாக்கியருந்தால் மருத்துவர் சாட்சியமளித்துள்ள படி அ.சா.1க்கு 2 x 1 x 1 செ.மீ அளவில் காயம் ஏற்பட்டிருக்காது என்றும், அருவாளால் தலையில் தாக்கினால் உள்நோயாளியாக

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.04.08 20:25:59 +0530

அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் அளவிற்கு காயம் அதிகமாக ஏற்பட்டிருக்கும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அ.சா.6க்கு நெஞ்சில் எவ்வித கிழிந்த காயமும் இருந்ததாக மருத்துவர் சாட்சியமளிக்காததால் அ.சா.1 மற்றும் அ.சா.6 கூறியுள்ள படி அ.சா.1 மற்றும் அ.சா.6ஐ 1வது எதிரி அருவாளால் தாக்கியதாக கூறியுள்ளது நம்பகத்தகுந்ததாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

26) மேலும், சம்பவம் நடந்த நேரம் மாலை 05.30 மணி என்பதாலும், போலிசார் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று அ.சா.1னிடம் மாலை 05.45 மணியளவில் வாக்குமூலம் வாங்கியதாக அ.சா.1 சாட்சியமளித்துள்ளதாலும், முதல் தகவல் அறிக்கையில் தகவல் கிடைத்த நேரம் இரவு 08.30 மணி என்று முரண்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளதாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரம் இரவு 08.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளதாலும், விபத்து பதிவேட்டில் அ.சா.1 மற்றும் அ.சா.6 சிகிச்சைக்கு வந்த நேரம் மாலை 05.24 என்று குறிப்பிடப்பட்டுள்ளதாலும் இவை அனைத்தும் ஒன்றோடொன்று முரண்பட்டு அமைந்துள்ளதால் வழக்கு சம்பவத்தை பற்றி சந்தேகம் ஏற்படுவதால் அரசு தரப்பில் சம்பவம் நடந்தது என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

27) மேலும், அ.சா.1 மற்றும் அ.சா.6 இருவரும் தனித்தனியாக இருசக்கர வாகனத்தில் சென்றதாக அ.சா.1 சாட்சியமளித்தும், அ.சா.6 ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றதாக சாட்சியமளித்துள்ளதால் இருவரும் ஒன்றாக சென்றார்களா இல்லை தனித்தனியாக சென்றார்களா என்பது முரண்பட்டு அமைந்துள்ளதால் மேற்படி சம்பவத்தை பொறுத்து சந்தேகம் ஏற்படுவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

28) மேலும், அ.சா.1ன் வீட்டு வாசலுக்கு முன்பாக எதிரிகள் வந்து அ.சா.1ஐ ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதாக கூறியுள்ள நிலையில அ.சா.1ன் வீட்டுக்கு அருகில் உள்ள நபர்களை சாட்சிகளாக விசாரித்து மேற்படி சம்பவத்தை பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், சம்பவமானது ஆனதாண்டவபுரம் இரயில்வே கேட்டுக்கு அருகே நடந்ததாக கூறியுள்ள நிலையில் மேற்படி சம்பவ இடமானது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்பதால் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்த தனிநபர் சாட்சிகளை அரசு தரப்பில் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. எனவே, சம்பவத்திற்கு பின்பு தான் சம்பவ இடத்திற்கு வந்ததாக கூறியுள்ள அ.சா.2 மற்றும் அ.சா.3 சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியமளித்துள்ளது நம்பகத்தகுந்ததாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளும், ஆவணங்களும் முரண்பட்டு அமைந்துள்ளதால் அரசு தரப்பில் வழக்கினை எதிரிகளுக்கு எதிராக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்படவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:26:16 +0530

29) புகார்தாரரான அ.சா.1, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.6 ஆகியோர் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ள நிலையில், அ.சா.7 முதல் அ.சா.9 வரையிலானவர்களின் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

30) எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கின் சம்பவத்தை பற்றி சாட்சிகள் யாரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் சம்பவ சமயத்தில் எதிரிகள் தான் அ.சா.1, அ.சா.6ஐ வழிமறித்து, திட்டி, அருவாளால் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தி, கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள் என்ற குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்படவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

31) இறுதியாக, 1வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324 (2 எண்ணிக்கை), 323, 506(ii) இதசவின் கீழும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323 இதசவின் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எதிரிகள் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

32) எதிரிகளால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப்பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

33) அரசு தரப்பால் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.08 20:26:30 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

அட்டவணை

1. அரசு தரப்பு சாட்சிகள்

அ.சா.1 – திரு. ஆனந்த் (புகார்தாரர்)

அ.சா.2 – திரு. அருண்ராஜ்

அ.சா.3 – திரு. ராஜ்குமார்

அ.சா.4 – திரு. மோகன்

அ.சா.5 – திரு. ராஜமாணிக்கம்

அ.சா.6 – திரு. தியானேஷ்வரன்

அ.சா.7 – திரு. Dr. பாரதிதாசன்

அ.சா.8 – திரு. செல்வகுமார், தலைமை காவலர்

அ.சா.9 – திரு. பார்த்திபன், உதவி ஆய்வாளர்

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.06.2021 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 11.06.2021 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.3 | 11.06.2021 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.4 | 11.06.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 12.06.2021 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 12.06.2021 | மாதிரி வரைபடம் |

அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை

எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை

குறிப்பு

1. எதிரிகள் விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.
3. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.04.08 20:26:37 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.